**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.113/2021 R.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | இளம்பரிதி |
| த/பெ. | ராதாகிருஷ்ணன் |
| வயது | 36 |
| வசிப்பிடம் | எண். |
| தொழில் | சட்ட மேலாளர் |

**முதல் விசாரணை 01.04.2026**

நான் ICICI Lombard நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிகிறேன். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வரைபட ஒளி நகல் எ.ம.சா.ஆ.1. இறந்துபோன ராஜம்மாள் என்பவரது ஆதார் அட்டை ஒளி நகல் எ.ம.சா.ஆ.2.

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமம், காப்பீட்டு சான்று ஆகியவை நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் பாலிசி விதி மீறல் எதுவுமில்லை. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் எதிர்மனுதாரர் மீது தான் குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரிடம் எங்கள் புலன் விசாரணை அலுவலர் எந்த வாக்குமூலமும் பெறவில்லை. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை